ஸ்ரீ:

கானவித்யா ப்ரகாசினி

இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. } செப்டம்பர்–1932. { இதழ் 12.

இசை இன்பம்.

" வயிரியர் மதுரகீதம் மங்கையர் அமுதகீதம்
செயிரறு மகரயாழின் தேம்பிழி தெய்வகீதம்
பயிருறு வேயின் கீதம் என்றிவை பருகிவிண்ணோர்
உயிருடை உடம்புமெல்லாம் ஓவிய மொப்ப நின்றார். "

" வங்கியம் பல தேன் விளம்பின
வாணி முந்தின பாணியின்
பங்கியம் பரம் எங்கும் விம்மின
பம்பை பம்மின பல்வகைப்
பொங்கியம் பல வுங்கறங்கின
நூபுரங்கள் புலம்பவெண்
சங்கியம்பின கொம்பலம்பின
சாம கீதம் நிரம்பவே "

(கம்பர்)

" கருங்கொடிப் புருவமேரு
கயனெடுங் கண்ணுமாடா
வருங்கம மிடறும் விம்மா
தணிமணி யெயிறுந் தோன்றா
இருங்கடற் பவளச்செவ்வாய்
திறந்திவள் பாடினளோ
நரம்பொடு வீணை நாவில்
நவின்றதோ வென்று நைந்தார். "

(சிந்தாமணி)

" உரலைசைந் திடாதடுக்கி
உரியில் நெய்யெடுத் தயின்றோன்
குரலைசைந் தூதுமோர் வேய்ங்
குழல்மொழி மாதர் மாழ்க
சிரலைசைந் தாடா நின்ற
சிறகர்போல் மத்களத்தை
விரலைசைந் தறைத லன்றி
மெய்யசையாமல் நின்றான்."

(சிவப்பிரகாசர்)

" காவியங் கண்ணும் மூடா
கவரிதழ் தானும் கோடா
வாவியங் கமலம் அன்ன
வதனமும் நுதலும் எரு
தூவியந் தோகை நல்லார்
சுவரின்மேல் எழுதிவைத்த
ஓவியம் பாடிற்றென்னப்
பாடினார் உருக யாரும்."

—அரிச்சந்திரபுராணம்.

" ஆழியின் அமுதம் பொங்கி
அலையெறிந் தொழுகிற்றென்ன
ஏழிசை நரம்புகொண்ட
மகரயாழ் இசையப்பண்ணி."
(கச்சியப்பர்.)

" பூதங்க ளொத்துப் புதுமைதரல் விந்தையெனின்
நாதங்களொத்து நயந்தருதற் கொப்பாமோ ? "
(பாரதி.)

குறிப்பு:— இசை இன்பத்தை வருணிக்கும் இப்பாடல்களில் கம்பர் பாடல்கள் இரண்டும் இசைமயமாகவே இருக்கின்றன. சிந்தாமணியிலிருந்து எடுக்கப்பெற்றுள்ள பாட்டு சில அரிய உண்மைகளை வெளியிடுகிறது. கச்சியப்பர்–பாட்டு அவர் தம்மை மறந்து நின்றபோது பொங்கிய மதுரகீதமாகும். 'நரம்பொடு வீணை நாவில் நவின்றதோ ?' என்று சிந்தாமணி ஆசிரியர் கூறுவது, தெவிட்டாது தித்திக்கும் அமுதகீதமன்றோ ? கம்பர்பாடல்கள் இன்பத்தால் இழைக்கப்பெற்ற தெய்வகீதமென்றே போற்றத்தக்கன.

யாழ் தென்னாட்டுக் கருவி, வீணை வடநாட்டுக்கருவி. இரண்டும் உருவில் ஒற்றுமை உடையன. எனவே பிற்காலத்தார் இரண்டையும் அபேதமாகக் கருதுவாராயினர். மேல்நாட்டு வாத்தியமாகிய பிடிலும் நமது சங்கீதத்திற்குப் பொருத்தமா யிருக்கிறது.

துளைக்கருவியில் புல்லாங்குழல் மிகச்சிறந்தது. மிருதங்கம் முதலியன தோற்கருவிகள் வாத்தியப்பாட்டைக் காட்டிலும் வாய்ப்பாட்டிற்கு இயற்கை ஞானமும் உழைப்பும் அதிகமாகவேண்டும். இத்தகைய சங்கீதத்தைக் கம்பர் முதலிய கவிகள் அடிக்கடி வருணிக்கிறார்கள். பூதங்கள் உலகமாக பரிணமிக்கும் அற்புதத்தைக்காட்டிலும் நாதங்கள் இன்னிசையாக இசைந்து இன்பம் தருவது பேர் அதிசயமாகும் என்பது பாரதியார் கருத்து.

வீணை வாசித்தலைக் குறித்துப்பாடும் சிந்தாமணி ஆசிரியர் வீணாகானத்தின் லட்சணத்தையும் ஒருவாறு வெளியிடுகிறார். ஒரு பெண்மணி பாவைபோல் அமைதியாக இருந்து வீணை வாசித்து அதற்கேற்பப் பாடினாள் என்பது சிந்தாமணிப்பாட்டின் தேர்ந்த கருத்து. இப்படியே சிவப்பிரகாசர் வாக்கில் மிருதங்கம் வாசித்ததற்குரிய லட்சணம் வெளியிடப்பெறுகிறது. வாய்ப் பாட்டு இசைப்போரின் இலட்சணம் அரிச்சந்திரபுராண ஆசிரியர் வாக்கில் ஒருவாறு வெளிப்படுகிறது.

'வங்கியம் பல தேன் விளம்பின' என்றுதொடங்கும் கம்பர் பாட்டு ஓர் இசைவிருந்தைச் சித்தரித்துக் காட்டுகிறது. இவ் விருந்தில் புல்லாங்குழல் பல தேன்-அமுதம் பரிமாறுகின்றன. வாய்ப்பாட்டு குழலிசைக்கு முற்பட்டு ஒலிக்கின்றது. தாளவகை களின் கூட்டொலி சுற்றுப்புறமுள்ள ஆகாயமண்டலத்தில் விம்மி நிறைகின்றது. பம்பை யொலியும் வேறுபல கீத வாத்தியங்களின் ஒலி விசேஷங்களும் அலைமேல் அலை எறிந்து பொங்குகின்றன. அவ் வொலிகளோடு அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருக்கும் பெண்மணி களின் சிலம்பொலிகளும் கலந்துகொள்ளுகின்றன. வெண்ணிறச் சங்கங்கள் வாய்விட்டுப்பேசுவன போல் முழங்குகின்றன. இவ் இன் னிசை முழக்கங்களையெல்லாம் கொம்புவாத்தியம் அலம்பிவிடுவது போல் கோஷிக்கிறது. இவற்றினிடையே சங்கீதம் எவ்வாறு நிரம்புகிறது, பாருங்கள்!

அணுத்திரளின் ஊடே ஆகாயம் சென்று சேர்ந்து நிரம்பு வதுபோல், இன்னிசைக் கூட்டத்தின் இடைகளிலெல்லாம் சாமகீதம் சென்று சேர்ந்து நிரம்புகின்றது. இவ்வாறு இசைக் கருவிகளின் ஓசை வேறுபாடுகளை மனவெளியிலே உயிர்ச்சித்திர மாகக்காட்டும் கம்பர் கவிநயம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இராமன் வில்லிறுத்து வெற்றிசூடிய சந்தர்ப்பம் கீதவினோ தங்களின் இசைமயமாகத்திகழ்ந்ததென்பது கம்பாது முதற்பாட்டின் தேர்ந்த கருத்து. இப்பாட்டில் சங்கீதத்தின் வசீகர சக்தியும் தெய் வத்தன்மையும் குறிப்பிக்கப் பெறுகின்றன.

இத்தகைய இசை அமுதம் நமது உள்ளத்தை வசீகரிப்பது போல் இறைவனையும் வசீகரிக்கிறது என்பது நமது முன்னோர் கருத்து.

கர்மயோகம்.

தைத்திரீயோபநிஷத்தில் "பிரும்மத்தை யறிந்தவன் கடவுளையடைகிறான்" என்று கூறப்பட்டிருக்கிறது. பிரும்மத்தை யறிவதற்கு எவ்வளவோ வழிகளிருப்பினும், வேதாந்த மார்க்கமே சிறந்ததென பல்லோராலும் கொண்டாடப்படுகிறது. அதன் காரணம் வேதாந்தத்தின் விழுமியகருத்துகளே. அவற்றுள் சிலவற்றைக் கீழேகூறுவோம்.

ஆத்மாவானது, கூர்த்த மதியினும் மிக்கமேம்பட்டது என்பது ஓர் முக்கியகொள்கை. காண்ட் என்ற மேனாட்டு தத்துவ சாஸ்திரி உலகத்தை ஓர் முக்கோணத்துள் அடைத்தார். அதாவது இடம், காலம், நிகழ்ச்சி என்ற மூன்றினுள் உலகம் அடங்கியுள்ளது என்று கண்டார். வேறு வார்த்தைகளில், உலகத்தை மனிதனது மானஸசக்திக்குள் அடங்கியதாகக் கண்டார். ஆகையினாலேயே உலகத்தின் உண்மை ஸ்வரூபம் மாயை என்று ஏற்படுகிறது. மோக்ஷத்தில், உயிருடன் இருக்கும்பொழுதே விடுதலை பெறுதல் என்றவோர் தத்துவத்தை (ஜீவன் முக்தியை) வேதாந்தம் வலியுறுத்துகிறது. மனிதாத்மாவும் பரம்பொருளும் ஒன்று என்பதும் ஓர் முக்கியகொள்கையாகும். பின்னும் பலவற்றுள், மறுபிறப்பு, கர்மா, கடவுளைப்பற்றிய உயர்வான, ஸச்சிதானந்த சாச்வதஸ்வரூபி என்ற எண்ணம் முதலியன குறிப்பிடத்தக்கவை. முடிவாக, வேதாந்தம், ஓரே வார்த்தையில் மதத்தையும் தத்துவத்தையும் தன்னுள்கொண்டு திகழ்கிறது.

முதல்கூறப்பட்ட உபநிஷத்வாக்கியத்தை யெடுத்துக்கொள்வோம். பிரம்ம ஞானத்தையடைவதற்கு, வேதாந்தமார்க்கத்தில் நான்குயோக வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைமுறையே கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் என்பன. யோகம் என்ற சொல், ஆத்மா உண்மைப்பொருளுடன் ஒன்றிடச் சொல்லும் பாதையைக் குறிப்பிடுகிறது. இந்நான்கு வழிகட்கும் இவ்விதம் பெயர்வரக் காரணமென்னே? ஓர் யோகசாதனத்தில், கடவுளையடையும் வழியில், கர்மா (செய்கை) பிரதானமானால், அது

கர்மயோகம் எனப்பெறுகிறது. அன்பு மேலிட்டு நிற்கும்பொழுது பக்தியோகம் எனப்படுகிறது. இவ்விதமே மற்றவைகட்கும். இவை நான்கும் முறையே, ஆத்மா கடவுட்டன்மை அடைவதற்கான நான்குபடிகளாம். கர்மயோகத்தில் மேனிலையடைவதால் தாமாகவே அடுத்த படியாகிய பக்தியோக நிலையெய்துகிறோம். அதனின்றும் ராஜயோக நிலையும், கடைசியில் ஞானயோக நிலையும் அடைகிறோம். ஆகவே பக்தியோக நிலையிலுள்ளவர்கள் கர்மயோக சித்தர்கள். ராஜயோகிகள் கீழிரண்டுயோகங்களிலும் வல்லமைபெற்றவராவர். இப்படிப் பார்க்கும்பொழுது ஞானி ஓர் முதிர்ந்த கர்மயோகியாகிறான்.

இவ்விதம் நால்வகை யோகங்கள் எழுந்ததின் காரணமென்னை? ஏதாவது ஒருயோக சாதனத்தையே கோடல் ஒண்ணாதா? என்ற கேள்விகள் நம்முள் எழுவது இயல்பே. ஆனால் ஊன்றிப்பார்க்கும்பொழுது உண்மை புலனாகும். உலகத்திலுள்ள மக்களின் தன்மை ஒன்றினின்றும் மற்றொன்று வேறுபட்டது. குணாகுணங்கள் பலதிறப்பட்டவை. ஆயினும் ஆன்றோர் அவைகளை மூவகையாக வகுத்துள்ளார்கள். அவைகளே, ராஜஸம், தாமஸம், சாத்விகம் என்ற முக்குணங்கள். ஆகவே இம்மூன்று பிரிவினர்க்கும் ஒரே யோகசாதனம் பயன்தராது. அவரவர் மனப்பான்மைக்கேற்றவாறு சாதனத்தையமைத்தல்வேண்டும். அர்ஜுனன் ராஜஸகுணம் படைத்தவன். ஆகவே கண்ணன் அவனுக்கு கர்மயோகத்தையுபதேசித்தான். நிச்சயமாய் அவன் விஷயத்தில் ஞானயோகம் பயன்பெற்றிருக்காது. பல திறப்பட்ட குணங்களுக்கு ஏற்றவாறு யோக சாதனங்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

கர்ம மார்க்கம் என்று மற்றொன்று உள்ளது. அதையும் கர்ம யோகத்தையும் ஒன்றுபடுத்திக்கூறுதல் கூடாது. கர்மமார்க்கம், வேதத்தில் விதித்தவண்ணம் யாகம் முதலியவைகள் செய்து தேவதைகளைப் பிரீதிசெய்து வேண்டுவனபெறல். அது காமியம். மற்றொன்று புலன்களுக்கான வேலை. நிஷ்காமியம். இரண்டிற்கும் மலையளவுவித்தியாசமுள்ளது.

கீதையைப்போல், கர்மயோகத்தைப்பற்றி, விரிவாக, தெளிவாகக்கூறும் நூல்வேறு இல்லை. அதில் பகவான் "ஞானத்தைப் போல் தூய்மை தரும் பொருள் இவ்வுலகத்தில் வேறெதுவும்இல்லை. ஆனால் கர்மயோகி தானாகவே தக்கபருவத்தில் ஆத்மஞானத்தை

யடைகிறான்." என்று சொல்லுகிறார். ஆகையினால் சாதாரண மாந்தர்க்கு கர்மயோகத்தைப்போல் பயன்தரும் சாதனம் வேறெதுவுமில்லை.

கர்மயோக சித்திக்கு இன்றியமையாத இரண்டு குணங்கள் அவசியம். முதலாவது ஆசையின்மை. அதாவது வினையின் பயனைப் புறக்கணித்தல். இரண்டாவது, வினையை ஆண்டவனுக்கே வேள்வியாகச் செய்தல். இயற்கையிலேயே இரண்டாவது கூறப் பட்ட விஷயம் முதலதின் விளைவாகும். எப்படியெனில், செய்கையின் பலனைக்கருதாவிடில் அது நமக்குப் பயன்படுவதில்லை. ஆகையால் கடவுளுக்கு அர்ப்பணமாகிவிடுகிறது அல்லவா? கீதையில் பகவான் "தொழில் செய்யத்தான் உனக்கதிகாரமுண்டு. அதன் பயன்களில் உனக்கு எப்பொழுதுமே அதிகாரமில்லை. ஆனால் தொழில் செய்யாமலுமிருந்தே" என்கிறார். பின்னும் "தனஞ்ஜயா! யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றிதோல்விகளை நிகரெனக் கொண்டு தொழில்களைச் செய்க. நடுநிலை, யோகமெனப்படும்" என்றும் வலியுறுத்துகிறார்.

ஆசைப்பற்று அற்றுவிடும் பொழுது, துக்கம், பீதி இவ்விரண்டு அரக்கர்களிடமிருந்தும் விடுதலையடைகிறோம். செய்யும் வினைகளை ஆண்டவனுக்கு அர்பணிப்பதால், ஈசனிடம் இழுக்கப் படுகிறோம். ஈசனுவது யாது? நம் ஆத்துமாவே. ஆகையால் நாம் நம்மையே உணர ஏதுவாகிறது. இன்னும் விளக்கிச் சொல்வோம். செய்கைகளை தெய்வத்திற்கு நிவேதிப்பதால், அவனைப்பற்றிய எண்ணம் நம்மைச் சூழ்ந்துகொள்கிறது. ஜகத் ஸ்ருஷ்டியின் பரமாணுவினுட் பரமாணு நாம் என்பதை உணருகிறோம். நாம் ஆண்டவனின் ஆக்ஞைப்படி செய்யும் கருவிகளே என்றும் தெளிகிறோம். சிருஷ்டியனைத்து மூலமாக அவன் பேசுகிறான் என்பதும் அதில் ஒரு சிறு பகுதி நாம் என்பதும் புலனாகிறது. எனவே எல்லோரும் சமம் என்ற புத்தியடைகிறோம். கீதையில் பகவான் "புத்தியுடைய மேதாவிகள், செய்கையால் விளையும் பயனைத்துறந்து பிறவித்தளை நீங்கி, ஆனந்தபதவியடைகிறார்கள்" என்று சொல்லுகிறார்.

வினையாற்றுவதால் தாமஸகுணம் ஒழியும். ஆனால் பயனை விரும்பாதசெய்கை ராஜஸ குணத்தைப் போக்குகிறது. எப்படியெனில், ஆசையின்மையும், கடவுள் வழிபாடும் நிஷ்காமியத்தின் ஜீவநாடிகள். ஆகையினால், தன்னலவேள்வி, ஸாத்விக குணமுடையவர்களின் சால்பு என்று தெளிவாகிறது. செய்கையின்பின் எவ்வித

காரணமேனும் இருக்குமானால், அதன் நிஷ்காமியத்துவம் ஒழிந்து விடும். உதாரணமாக, செய்கை நிஷ்காமியமாயிருக்கவேண்டுமென்று வினையாற்றுவதாலேயே நிஷ்காமியத்துவம் அழிந்துவிடுகிறது.

பீஷ்மர், கர்மயோகிகளில் இணையற்றவர். இராமன், இலக்குவன், பரதன், கிருஷ்ணன், புத்தர் இன்னும் பலரும் கர்மயோகிகளாவர். இவர்கள் எவ்விதம் கர்மயோகிகள் என்று கேட்டால், அவர்கள் ஆண்டவனிடம் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டிருந்ததுடன், திடமான நன்னடக்கையும் வாய்ந்தவர்கள். இழிதொழிலில் கனவிலும் கண்செலுத்தாத பெருந்தகைகள். சுயகாரியங்களில் கவனத்தைச் செலுத்துவது—அதைவிட உயர்வான செய்கை வேறில்லை என்ற அந்தகாரம்—நம்மவரின் இழிதகைமை. ஆனால் அம்முதியோர் நம்மினும் மிகமிக உயர்வானவோர் உலகில் மிலவினர். வாள் முனையில் வீற்றிருக்கும்போதும் ஒருவரையொருவர் முழுமனதுடன் நேசித்தனர். கடமையைச் செய்வதில் அவர்களை எதிர் செய்வது ஒன்றுமில்லை. இவைகளெல்லாம் அவர்களுக்கு எப்படி சாத்தியமாயது? நீணிறவானில் தனிசிறந்து விளங்கும் நட்சத்திரச்சுடரை என்றும் மறந்தார்களில்லை! அதுவே காரணம்.

வினையை வினைக்காகவே செய்வதென்பது இயலாத காரியம். மனம் பற்றென்பதை அறவே யொழித்துவிடுவதற்குப் போதிய ஆற்றல் அதனிடம் இல்லை. ஆகையினால் உயர்ந்த செய்கைகளால் மனதை ஆகர்ஷிக்கச்செய்து, இழிதொழில்களைக் கைவிடுவதுதான் சாத்தியம். ஆகவே மனிதனுக்கு நற்றொண்டு புரிவதையும் கடவுள் வந்தனையையும் பிணைத்துவிட்டால் தேனுடன் சர்க்கரைப்பாகு கலந்ததுபோலச் சிறந்த பலன்கிட்டும். இவை யிரண்டும் ஒன்றினால் யோகசித்தியடைகிறோம்!

அபரிமிதமாகப்பாடுவது எப்பொழுது? தன்னை மறந்து பாடும் வேளையில். அழியாச் சித்திரம் பொறிக்கப்படுவது எப்பொழுது? தன்னை மறந்து வரையும் வேளையில். பாடகன் நன்றாகப் பாடவேண்டுமென்று பாடியபொழுதா தெய்வ சங்கீதம் கிட்டியது? அல்ல. ஆனால் ஒன்றும் நினையாத வேளையில் தெய்வகீதம் அமைந்தது. ஆகவே நிஷ்காமியமாகச் செய்யப்படும் காரியமே சாலச் சிறந்ததாக அமைகிறதல்லவா?

ஓம் சாந்தி:

அன்பு

(குருகூர்தாஸன்)

"இறவாத இவ்வன்பு வேண்டி" என்றும், "ஈறில்லாப்பதங்கள் யாவையுங் கடந்த வின்பமே, என்னுடையன்பே" என்றும் அறிஞர் கூறிய அமுத அனுபவ வாக்கியங்களினாலும், நம் அனுபவத்தினாலுமே, அன்பே இன்பமென்றும், வன்பே துன்பமென்றும் அறிகின்றோம். "இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம், வன்சொலாலென்று மகிழாதே" என்னும் கூற்றை நோக்குக. ஆதரவற்ற ஓரேழையினிடத்து எவ்வித கைம்மாறும் எதிர்நோக்காமலே நாம் பரிதாபம் கொண்டு அன்புசெலுத்தி அவனுக்கு உணவாதிகள் தந்து உபசரிக்கும்போது, நம் உள்ளத்தில் இயற்கையிலே ஒரு வகையான இன்பம் உண்டாவதை நாம் காண்கிறோம். இது கல்வி, கேள்வி, சாது சங்கச்சார்பு, நல்லொழுக்கம் முதலிய நற்செய்கைகளினாலுண்டாகும் ஒரு சம்பத்து. நிஷ்காரணமாக பிறர்க்குத் துன்பம்செய்து வன்பு பாராட்டி அவர்களை மனமொழிகளினால் அல்லற்படுத்தும்போது, அவர்கள் வருந்துவதைக்கண்டு இன்பமடைகிறவர்களையும் நாம் உலகத்தில் காண்கிறோம். இவர்கள் மானிடமிருகங்களேயன்றி கரசரணாதியவயவங்கள் பெற்றிருக்குங் காரணத்தினாலேயே மானிடராகார்.

அன்பென்னும் வித்து நம்பெருமானருளால், நம்மனமெனும் புலத்தில் மெல்ல அங்குரிக்கும்போது, அதனை நல்லொழுக்கமென்னும் நீர்கொண்டு பாய்ச்சி, அது தலையெடுக்கவொட்டாது தோன்றும் தன்னலமென்னும் தீயகளையைக் கல்வியறிவென்னும் கழிகொண்டு கிண்டியெறிந்து, காமக்குரோதாதிவன்

பறவைகள் அதற்குத் தீங்குசெய்ய அணுகாதபடி, கடவுளாக்ஞை யென்னும் பெரும்பறையை முழக்கி யோட்டியபின், அருளென்னும் பயிர்தழைக்க அதில் விளையும் இன்பமென்னும் போகத்தை அனுபவித்துச் சுகிப்பது ஒவ்வொருவருடைய பெருங் கடமையாகும். பிறவுயிர்களை வருத்துஞ்சிங்கம், புலி, முதலிய துஷ்டமிருகங்களும் தம்முடைய குட்டிகளிடத்து அன்பு பாராட்டி அவற்றைப் போஷிக்கவில்லையா?

ஒரு சமயம் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட ஒருவன் காட்டிலுள்ள ஓர் சிங்கத்தின் காலில் இருந்த முள்ளைப்பிடுங்கி அதன் நோவைத் தீர்த்தான். சிறிது காலத்திற்குப்பின் அந்த மனிதன் பிடிக்கப்பட்டு இவனால் உதவிபெறப்பட்ட சிங்கத்தின் கூட்டில் விடப்பட்டான். பலநாள் பட்டினியிருந்தும்கூட முன்செய்த அன்பான உதவியை நினைந்து அம்மிருகேந்திரன் அவனுக்கு யாதொரு தீங்கும் செய்யாமல் விட்டுவிட்டதாம். இயற்கையிலேயே கொடிய மூர்க்க குணமுள்ள சிங்கத்தையும் சாந்தப்படுத்தியது இவ்வன்பினாலானதன்றோ! அன்பு என்னும் இவ்வரியபொருள் பிரதமத்தில் தன் சுயநலத்தையே நாடி நின்று, பிறகு தன் மனைவி, மக்கள், முதலிய தொடர்புடையாரிடத்துப் பரவுவதாகும். இது ஏனையோரிடத்தும் வியாபித்து எவரையும் நம்மைப்போலவே பாவித்து வாஞ்சைபாராட்டும்போது இவ்வன்புக்கு அருளென்று பெயர். ஆகையாற்றான் "அருளென்னும் அன்பீற்குழவி" (அன்பென்னும் தாய் பெற்ற அருளென்னும் குழந்தை) என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூறுகின்றனர். உலகத்திலுள்ள எல்லோரையும் நம்மவர்களாகப் பாவித்து அவர்களிடத்து அருள் பாராட்ட வேண்டுவது ஒவ்வொருவர்களுடைய செய்கடனாகயிருப்பதால், முன்னே நம்மிடத்தும் நமக்கு நெருங்கிய உறவினர்களாகிய மனைவி, மக்கள் அவர்கள்மூலமாகவரும் சம்பந்திகள், நண்பர்கள், ஆகிய இவர்கள்பால் இயற்கையிலுண்டாகும் அன்பை வளர்க்கும் நிமித்தமே இல்வாழ்க்கைத் தருமத்தை இன்றியமையாத

ஆசிரம தருமமாகப் பெரியோர் ஏற்படுத்தினார்கள். "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்றும் "இல்லறமல்லது நல்லறமன்று" என்றும் அற எரிகள் அறுதியிட்டு கூறியதின் காரணம் இதுவே யாகும்.

"என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பிலதனை யறம்",

(என்பு அமையப்பெறாத புழுவை வெயில் சுட்டெரிப்பதுபோல் அறக்கடவுள் (தருமதேவதை) அன்பிலாதவரைக் கோபித்துத் தண்டிக்கும்) என்று தெய்வப்புலவர் கட்டளை யிட்டிருக்கின்றனர். "அன்பிலவனை" 'அல்லது அன்பிலவரை' என்னாது அன்பிலதனை என்றமையால், அன்பிலாளரை உயர்திணைப்பொருளாக மதிக்கமனமின்றிக் கேவலம் அஃறிணைப்பொருளாகவே இழிவு படுத்திக் கூறியதாகும்.

இப்படிப்பட்ட அரும்பொருளாகிய அன்பென்பது தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகைப்படும். தலையன்பென்பது முதல்தரமான மேலான அன்பு இது இக்காலத்து காண்பதரிது. தன்னை முற்றும் மறந்து பிறரைத் தன்னினும் மேலாகப் பாவிக்கும் தன்மையது தைலதாரைபோல் இடைவிடாது, எவ்வகைப்பட்ட இடுக்கண்களுக்கும் சளையாமல் விளங்குவது. கண்ணப்பநாயனார் தம்முடைய ஆன்மார்த்தமாகிய காளத்திப்பரைக் கண்டபோது தம்மை மறந்து அவர்வயமாகியே நின்ற நிலைதான் தலையன்பெனப்படும். காளத்தியப்பர் கண்ணில் உதிரம் பெருகுவதைக்கண்ட மாத்திரத்திலேயே தன்னையே யொரு பொருளெனமதியாமல், ஊனுக்கு ஊன் மருந்தாகுமே என்னும் நினைவு தோன்ற உடனே அம்பினால் தமது கண்ணை இடர்ந்து அவருக்கு அப்பியதும் நம்பெருமான் அவருடைய பேரன்பின் திறத்தை உலகத்தார்க்கு விளக்கும்பொருட்டு மற்றொரு கண்ணினின்றும் குருதிசோரும்படி செய்ய, அதைக்கண்ட மாத்திரம், "கண்டேன் கைகண்டதோர் ஔஷதம்" என்று குதூகலத்துடனே அன்பர் தம்முடைய மற்றொரு கண்ணையும் அம்பினால் தகர்த்தலைப்பட்டதும் தலையன்பாகும்.

" கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தியா ரறிதலல்லது மற்
ருறியு மன்பன்றது "

என்று அறிஞர் வியக்கின்ருர்கள்.

இவ்வன்பருடைய தேகமுழுவதும் அன்புருவமே யன்றிச் ்ததாதுக்களாலாகிய சாதாரண தேகமாகக் கொள்ளக்கூடாது. ்கையாற்ருன், " கண்ணப்ப னொப்பதோ ரன்பு " என்று ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமான் தம் திருவாசகத்தில் வியக்கின் றனர். " கண்ணப்ப னுக்குமோரான்பன் " என்று சொல்லவேண் டுவது இயல்பாயிருக்க அவ்வாறு கூருது " கண்ணப்பனொப்ப தோரன்பு " என்று கூறியதன் காரணம் யாதெனில் கண்ணப்பன் வேறு, அன்பு வேறு, என்று கருதுவது கூடாது; கண்ணப்பன் அன்பினுருவேயன்றி வேறல்ல என்னும் பரமரகசியத்தைச் சூசிப் பிக்கும்பொருட்டேயாம். இத்தகைய தலையன்பானது அன்புக் குரிய பொருளைக் காணுங்காலும் காணுக்காலும் இடைவிடாது உயிர்நிலையாய் நிற்பதாகிய பெருஞ்செல்வமாகும்.

இடையன்பு என்பது, அன்புக்குரிய பொருளை நேரிற் காணும்போது மாத்திரம் சுரப்பதொன்ருகும். நெருப்புக்கு முன் அரக்கையாவது, மெழுகையாவது காட்டும்போது அது மெல்ல உருகுவதுபோல், நேரிற்காணும்போது மாத்திரம் மனமுருகிப் பரவசமடைதலே இடையன்பாகும். அன்பிற்குரிய பொருளைவிட் டுப்பிரிந்த காலத்து இந்த இடையன்பு சுருங்கும்.

கடையன்பு என்பது இரண்டு கட்டைகளை ஒன்ருேடொன்று நெடுநேரம் தேய்க்கும்போதுண்டாகும் தீப்பொறிபோல் அன்பனும் அன்பிற்குரிய பொருளும் நேரில் நெடுங்காலம் பழகிய பின்னர் தோன்றும் அன்பாகும். இஃதும் பிரியும்போது பையப்பைய மறைவதாகும்.

சகல ஜீவராசிகளினும் மானிட ஜென்மமே உயர்ந்தது. "அரிதரிது மானிடராதலரிது" எப்பிறவியினும்மேம்பட்ட பிறவியாகிய மானிடப் பிறவியைமட்டும் பெற்றதனால் பிரயோஜனமில்லை. அம்மானிட ஜென்மம் எடுத்த ஒவ்வொருவரும் அன்புடையோராக இருத்தல் வேண்டும்.

"அங்கோடிங்கோட லமருங்கள்வர்
ஐவர்கலக மிட்டலைக்கும் கானகம்
சலமலப்பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித்தங் கோழை குடிபுகுஞ்சீறார்
அடலைப்பெரிய சுடலைத் திடருள்
ஆசைக்கயிற்றிலாடும் பம்பரம்
காமக்கனலிற் கருகுஞ்சருகு
கிருமிகிண்டுங் கிழங்கஞ்சருமி"

என்று பெரியோர்களால் இகழ்ந்து உரைக்கப்பட்ட நம்தேகம் சுத்தமடைந்து யாவரும் வியக்கத்தக்க அரும் பொருளாவது எதினாலென்று யூகித்தறியுமிடத்து அன்பு என்னுமரிய பொருளினாலேயேயென்று தெரியவரும்.

திரிலோகங்களிலும் அன்பினுமிக்கதோர் செல்வமில்லையென்று பொருள்படக் கம்பராகிய கவிச்சக்ரவர்த்தி,

"முன்பின்பின்றி மூவுலகத்தினும்
அன்பினல்ல தோராக்க முண்டாகுமோ."

என்று கூறியிருப்பது நன்கு நோக்கத்தக்கது.

இத்தகைய அன்பு முதன் முதலில் நம்மைபடைத்த கடவுளிடத்தும் பிறகு நமது பெற்றோர்களிடத்தும் அப்பால் படிப்படியாக நமது சகோதரர் உற்றார் உறவினர் முதலியவர்களிடத்தும் உண்டாக வேண்டும். இத்தகைய அன்பைப்பெருக்கி தனக்கென வாழா பிறர்குரியாளராயிருத்தல் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

சிறுவனும் படகோட்டியும்.

S. திருமலைசாமி அய்யங்கார்.

பெருத்த கோடைக்காலம். இலை மரம் நிலம் முதல் எல்லாம் கருகிப்புகை கமழும்படி அத்தனை கொடிதாக வீசுகின்றது வெயில். மனிதரேயும் இல்லை. பறவைகள்கூடப் பயந்து பொழிலிலும் பொய்கைக் கரையிலும் தங்கிவிட்டன.

கோடை என்பது மழைக்கடியாம். துன்பமே இன்பவிதை அன்றோ? அந்தவிதம் அதிக உஷ்ணம் பாவி வருந்திய உலகத்தை இனிது குளிர்ப்பித்துப் படுபொருள் ஆக்கிக் காப்பதற்காக ஈசன் அருளிய மழைக்காலம் இக்காலத்துக்குப் பின்னதே; ஆயினும் சிற்சிலகாலம் இக்கோடைத் தீயிடையிலேயே பெருமழை பெய்தலும் உண்டு. இம்மழை வீழ்ச்சி பொறுக்க அரிதாகிப் பயங்கர இடியுடையதாகி நின்று நடுக்குறுக்கும்.

இவ்விதம் மழைபெய்த ஒருநாள் நண்பகற்போதிலே, ஓர் ஆற்றங்கரை அருகிலே, எற்றந் தாழ்வில்லாத உறுப்பும், நீண்டு தாழ்ந்த கையும், உயர்ந்த உடலும், ஆடவரும் கண்டால் மயங்கத்தக்க முகமும் உடையான் ஓர் இளைஞன் சுமார் பதினேழு ஆட்டையன் ஓடும் நீரைப்பார்த்த வண்ணமாக நின்றுகொண்டிருந்தான். நுரைகொண்டு மண்டிச்செல்கின்ற அவ்வெள்ளத்தைப்போலவே அவனுடைய மனமும் நுரைத்துநின்றது. ஆனால் அதிக கவலையால் ஓடமட்டும் ஒருவழி கிடையாமையின் அது அடங்கிச்சுழன்று நிலைத்தது.

"உஷ்ணகாலம்; ஆற்றில் நீர் இராது; எளிதே நடந்து கடந்து போகலாம்என்று கொண்டு ஊரைவிட்டு இத்தனை தொலையும் வந்துவிட்டேன். என் கெடுகாலம் திடீரென மழை பெய்தது; வெள்ளமும் பெருகுகிறது................

"இதோ எதிர்ப்பட்டதை எல்லாம் தன்னிடம் சரிந்துவிழக் கரைத்தும், அடக்கம் இல்லாமல், தடையும் அற்றுச்செல்கின்றது வெள்ளம். இதுதானே காலநதியும்! யாரையுங்கருதாது தடுப்பரிதாகக்கண்டன எல்லாம் தன்பாலாக விரைந்திடுவதுதானே காலமும். ஆஹா! இந்தக்காலத்தைப்பற்றிச் சாந்திபருவத்தே வியாசர் கூறியுள்ளனவற்றை நினைக்க நினைக்க எனக்கு பயமே அதிகரிக்கின்றது. காலங்கடந்த பொருளே பொருள்.

"இந்த வெள்ளத்திலும் எத்தனை மீன்கள்! வாலடித்தும் மிதந்தும் உலாவருதல்! ஒன்றுக்கொன்று களியாட்டு; போராட்டம்! எந்தப் பிராணிக்கு, இரையாக்கக் கடலுக்கு இழுக்கச் செல்கிறதோ? யார் அறிவார்? இப்படி நீர்வழிப்பட்டு வருவதை அறியாமல் ஆடிமகிழும் மீனங்கள்தாமே மனிதரும்!

"ஹூம்! இனத்திலே ஒன்றை ஒன்று கொன்று கொள்ளுதலும் அல்லாமல், முறிந்துவரும் மரங்களால் மடிவன எத்தனை! மனிதர், மீன் ஆகார விருப்புடையார் தூண்டில் இட்டு ஏமாற்றிப்பிடிக்க ஒழிவன எத்தனை! வெள்ளம் மோதியும் சுழற்றியும் கொல்லச் சாவனவும் பல. இழுத்துப்போய் இட்ட கடலிலே பெருமீன் அருந்த அழிவன அனந்தம். இப்படியாக மடிவதனையே கொண்டுபிழைக்க அறியாது உழன்றும் மகிழ்வனவற்றைக் காணக்காண எனக்கு ஆச்சர்யமே பெருகுகின்றது.

"மேட்டைப் பள்ளமாக்கிப் பள்ளத்தை மேடாக்கி, நாட்டைக் காடாக்கி நடக்கும் பேதை அரசனும், குடியாதி மயக்கவெறிகொண்டு முள்ளுங் கல்லும் அறியாமல் வாய் நுரைக்க ஓடி வருந்துபவரும், பலரும்போலத் தாமும் வெற்றுடலாய்க்கழிவது அறிந்தும் எல்லாம் தமதாய்ப்படுத்து இரங்காது அல்லலாக்கிக் கழியும் அன்பில்லார் நெஞ்சத்தையும்போலச் செல்கின்ற காலவெள்ளத்தைக் கடந்து உய்ந்தாரே உய்ந்தார். மற்றையோர் உய்யாதாரே.

"என்ன யோசனை! நீள நீள நினைந்து என்ன செய்ய? என் செலவோ தடைப்பட்டது. இந்தத் தடையால், அற்ப இடையூற்

றால் என் மனம் பலபடச் சலித்திடுகின்றது. நெஞ்சமே! உனக்கு ஒன்று: இருப்பிற் புறப்பட்டு ஏகுதல் நலமென்றேன். உடன் வந்தாய்! அகலாது அப்புறம் கடந்துபோனாலன்றி நலம் பொருந்தாது. ஆதலால் வெள்ளம் வடியும் காறுமாவது ஒரு ஓடம்வரும் வரையாவது காத்திருப்பதே நலம்” என்று வெகுவாக நினைத்து நின்றான்.

அந்த நிலையிலே சிறுவன் நிற்பதையும் சுற்றி வெள்ளம் மிகுவதையும் சற்று திரும்பவும் உட்காரவும் இடமில்லாமல் இவன் திண்டாடப்போகிறான் என்பதையும் சற்று தூரத்திலே ஒரு திட்டையின் மேலிருந்த ஓடக்காரன் ஒருவன் இரக்கத்தோடு கவனித்து நின்றான். ஆனால் அவனை நமது சிறுவன் கண்டானில்லை.

அப்போது சிறுவன் தன் காலில் திடீரென ஒரு அலை தாக்கவே கனவு கண்டவனைப்போல நாலு திசையும் மருண்டு பார்த்தான். நாலு பக்கமும் ஏகப்பெருவெள்ளம். அஞ்சாத நெஞ்சு படைத்தவன் ஆதலால் இதன் மேலும் நீர் ஏறும்வரை பார்ப்போம் என்று கலங்காது நின்றான். “ஈசன் மலர்க்கால்களே என்னை இவ் வேளையில் ஈடேற்றும் பெரும்புணை. பாடுகிறான்.

வெள்ளமாய் வெள்ளத் தலையாய் விரிபொருளாய்
கள்ளமாய் நல்ல வெளியாகிக் காண்பார்கள்
உள்ளமாய் உள்ள நினைவாகி ஓங்கினாய்
கள்ளமலர்ப் பாதம் கடவுளே கைதொழுதேன்.

வெள்ளமே சூழ விலகிப் பிழைப்பறியேன்
உள்ளமே சாம்ப ஒருப்பட் டுழல்கின்றேன்
உள்ளினார் தீமை யொறுத்தாளும் அம்மானே
உள்ளினேன் உள்ளி உனைக்கூவி நிற்கின்றேன்.

பற்றிச் சலத்திழுத்துச் செல்லும் முதலையினைச்
செற்றின்ப மேவத் தெரியாத யானைக்காக்
கொற்றத் திகிரியுடன் கூடி எதிர்ந்தருளும்
வெற்றி உடையாயை மேவி விளித்தேனே.

ஐய மழைமுகிலே போலும் அமர்மேனிச்
செய்ய திகிரிச் செறிபடைய அம்மானே
உய்ய வழியறியேன் கூவி உனையிரந்தேன்
செய்ய நிலையருளிச் சேர்த்தாள வாராயோ.

காலில் அலையடித்துக் கான்னுயிர் போமாறு
காலமது நேரும் வெள்ளம் கடுகியதால்
மாலே மழைமுகிலே மாண்புறுவே ஆதரித்திக்
காலமெனை ஆண்டருள வாராய் கரியோனே.

ஆய் புணையுனது காலே அதுதவறின்
தீய புனல்புக்கு மாய்வே தெரியாயோ
தீய அவுணர் திறங்கடிந்து நல்லோரை
ஆயமொடு சாத்த அமரர் தலைவாவோ.

என்றுபாடி அவ்வுருக்கத்தே தன்னையும் மறந்து அவன் இருந்தான்

இதுகண்ட படகோட்டி தன் கையிலிருந்த கயிற்றைச் சுருட்டி வீச, ஏதோ பெரும் பொருள் என்று கருதி மருண்டு பார்க்கையில், தன்பால் கயிறு அலையொடு வரக்கண்ட சிறுவன்,

ஈசனே எம்மான் உனது பெருமாயை
ஆசிலா யாரே அறிவார்கள்—நேசமொடு
காக்கக் கயிறளித்தாய் உன்கழலை வந்தித்து
நாக்கொண்டு பாடுவேன் நன்கு.

கைம்மாறு அறியேன் கடுகியுனைப் பாடினேன்
எம்மா மழைமுகில்போல் எம்பெருமான்—பைம்மாண்ட
தாமத் துளவத் தனியகல மாலேயுன்
ஏமத்துக் கொள்வாய் எனை.

என்றுபாடி நிமிர்ந்தான். படகோட்டியும் தன்கையை அசைத்து இவனை வருக என்ன இவனும் தாழாது அக்கயிறே சார்பாக நீரிற் பாய்ந்தான். படகோட்டியும் அவனைத் தன்பால் இழுத்து நிலைப் பித்தனன். உடனே சிறுவன் படகோட்டியை "ஐய! ஆபத்துக் காலத்தில் உதவுபவரே கடவுள். அவரே தந்தை!

> ஈடேற்றி என்னைப் புரக்க இசைந்திட்ட
> ஈடேற்ற மில்லா இசையோனே—கோடேற்ற
> எம்மா னருளே இதுவென்னப் போற்றினேன்
> நம்மாண்ட தாமரைய்ம்போது."

என்று வணங்கினன். பொழுது சாயும் நேரமாகியது. சூரியன் பெரியனாகிச் சிவந்து மெள்ள வானையும் சிவப்பிக்கப் புகுந்தனன். ஓடக்காரன் "ஐய! இன்று இத்திட்டையே நமது இருப்பிடம். இரவு இங்குத்தானே இருக்கலாம். என்னுயிர் போம்வரை உன்னை நான் காப்பேன் அஞ்சவேண்டாம்" என்றுரைற்றினன். இருவரும் இரவை அங்குத்தானே கழித்தனர்.

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது "ப்ரகாசினி" மாதப் பத்திரிகையை விற்பதற்கும் சந்தா சேர்த்துக் கொடுப்ப தற்கும், விளம்பரம் சேர்த்துக்கொடுப்பதற்கும் தக்க சாமார்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விபரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். நமது சங்கீத புஸ்தகங்களுக்கும், ஏஜண்டுகளுக்குதக்க கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்.

நேயர்களுக்கு.

இவ்விதழுடன், நம் 'பிரகாசினி'க்கு முதலாண்டு முடிகிறது என்பதை நேயர்கள் அறிவார்கள். வடஇந்தியாவில், முக்கியமாக வங்காளத்தில் இதுபோன்ற பத்திரிசைகள் வெளிவருவதாயிருந்தால், அதற்கேற்படும் பொது மக்களின் ஆதரவு நம்மால் நம்பக்கூடாதபடி அமோகமாகவிருக்கும். அதனாலேயே 'பிரபாதக்' போன்ற பத்திரிகைகள் வெகு நேர்த்தியாக அச்சியற்றப்பெற்று மிளிர்கின்றன. இவ்விதம் பத்திரிகைகள் வெளிவருவது நாட்டிற்கே கௌரவமளிக்கும் என்ற விஷயம் நண்பர்களுக்குத் தெரியாததல்ல. சென்ற வருஷத்தில் 'பிரகாசினி'யைக் கூடியமட்டிலும் மேன்மையாக நடத்திவந்திருக்கிறோம் என்பதை நேயர்கள் அறிவார்கள். புதுவருஷத்தில், இன்னும் உயர்வாகப் படங்களுடன் வெளியிட உத்தேசித்துள்ளோம். ஆனால் அதற்கு நேயர்களின் அதிகமான ஆதரவு மிகவும் அவசியம். அஃது இல்லையேல் மிகவும் சிரமம்.

தென்னிந்தியக் கலையபிவிருத்திக்கான பத்திரிகைகள் மிகமிகச்சொற்பமே. ஆகையால் 'அத்திபூத்தாற்போல்' தோன்றியிருக்கும் நம் 'பிரகாசினி'க்கு தமிழ்மக்களனைவரும் ஆதரவளிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். சந்தாவிஷயமோ வென்றால், அதைவிடக் குறைவான தொகையை 'கலை'ப்பத்திரிகைகளிற் காண்பதரிது. பின், நண்பர்களின் தென்னிந்தியக் கலையபிவிருத்தியிலுள்ள ஊக்கமோ, புவிமுழுதும் பிரசித்தம். ஆகையால், வரும் வருஷத்தில் பழைய நண்பர்களெல்லோரும் புதுவருஷச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து, புதியசந்தாதாரர்களையும் சேர்த்துக்கொடுத்துப் பத்திரிகையை முன்னுக்குக்கொண்டுவர உதவியளிப்பார்கள் என்று முழுமனதுடனும் நம்புகிறோம். இவ்விஷயத்தில் இறைவன் நமக்கு துணை செய்யப் பிரார்த்திப்போமாக.

பத்திராதிபர்.

ஸ்ரீ ஆண்டாள் வைபவம்.

சென்னை கலைமகள் ஆவணி இதழில் எழுதுவதாவது:-

"ஸ்ரீ ஆண்டாள் வைபவம்:— தெய்விகப் பெருமை வாய்ந்த ஆண்டாளின் திவ்ய சரித்திரத்தையும் குணாதிசயத்தையும் பக்தி அனுபவத்தையும் கவிதையழகையும் சுருக்கமாக எளிய நடையில் வெளியிடும் இந்நூல் உருவிற் சிறியதேனும் பொருளிற் பெரியதாக உள்ளது. ஆண்டாளின் சரிதையையும் பிறவற்றையும் கூறும் ஆசிரியர் தமது சொற்களில் நாச்சியார் திருமொழியையும் இடையிடையே பதித்துவைத்திருக்கின்றார். நல்ல இனிய நடை. தமிழ்க் கதைகள் இந்த முறையில் வெளிவந்தால் தமிழுலகம் பெரிதும் போற்றும் என்பதில் ஐயமில்லை. இந்த முறையில் இதன் பிரசுரகர்த்தர்கள் இன்னும் பல நூல்களை வெளியிட்டால் தமிழர்களுடைய நூல் வரிசையில் அவை சிறப்பெய்தி விளங்குமென்று நம்புகிறோம்." ச.கு.க.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் தரப்படும். விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதவும்.

விலை அணா 3.

மானேஜர்:-

கான வித்யா பிரஸ்,
ஸ்ரீவைகுண்டம், S. I. Ry.

அறிவிப்பு.

புதுவருட சஞ்சிகையை சந்தாதார்களுக்கு வி. பி. யில் அனுப்புவதால் அதிகம் அணா ஆறு செலவாகுவதை உத்தேசித்து நேயர்கள் அனைவரும் 1932 அக்டோபர் 30-க்குள் தங்கள் சந்தா தொகையை மணியார்டர் மூலமாகவோ அல்லது ஏஜண்டு மூலமாகவோ எங்களுக்குக்கிடைக்கும்படி செய்யவேண்டுகிறோம். அசௌகரியத்தினால்பணம் அனுப்பமுடியாத சந்தாதார்களுக்கு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். நேயர்கள் வி பி யைப் பெற்றுக்கொண்டு எங்களை ஊக்கப்படுத்துமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்.

கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி
3. ச = சரணம்.
4. ~~~~ = துரிதகாலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. *—ஒவ்வொன்றும் ஒரு துரிதகாலமாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்திய ஸ்தாயி.
7. ○ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளத்தின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்த ரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.

    ச = சதுர்ச்ருதி ரிஷபம், சதுர்ச்ருதி தைவதம்.

    சா = சாதாரண காந்தாரம்.

    பி = பிரதிமத்திமம்.

    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதி தைவதம்.

    கை = கைசகிநிஷாதம்.

    அ = அந்தரகாந்தாரம்.

    கா = காகலிநிஷாதம்.

11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்கள் ஸ்வரத்திற்கு கீழ் வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இகார சஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள் படுத்தவும்.

ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்து வருகிற அருஞ்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல் நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு.
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவை ப போன்ற இரட்டை ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும். குற்றெழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு மாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16–மாத்திரைகள் அடங்கி நிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும். த்ருதக்கலத்தில் 8 துரிதகால மாத்திரைகளு மடங்கி நிற்கும். மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.

2; பெரியாழ்வார் பிரபந்தம்.

(முன் 480-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

130 தென்னவனச் செயல்கண்டு திருவடியி னுறவீழ்ந்தான்
முன்னவனை யிகழ்ந்துரைத்த முழுமூடச் சமையத்தார்
மன்னவனு முறுவல்செய வந்தாழ்வார் பதத்திறைஞ்சப்
பொன்னகரத் திறைபணியாற் போந்தவரும் போயினரால்.

வேறு.

131 இடிநிகர் முரச மார்ப்ப விமையவர் குழாங்க ளார்ப்பப்
படிமுழு தடைய வாளும் பாண்டியன் பரிவி னோடு
மடியேனே னல்லறீர வாளவந் தவரே யின்றிக்
கடிநகர் வலமாய் நண்ணிக் காட்சிதந் தருள்வீ ரென்றான்.

132 என்றசொற் கேட்ட போதி லீசனை நினைந்தாழ் வாரு
மொன்றதற் காமா காதென் றுரைத்தில ரொடுங்கி நின்றார்
சென்றெடுத் தவரை நீதித் தென்னவன் நீலக் கைக்குன்
றென்றென வுயர்ந்தயானை யெருத்தமீ துவப்போ டேற்ற.

133 பூதமோ ரைந்து மேத்த புரையறு மறங்க ளேத்த
வேதமோர் நான்கு மேத்த விண்ணவர் குழாங்க ளேத்த
வோதுமூ வுலகு மேத்த வோங்கிரு சுடரு மேத்த
மூதறி வுடைய மன்னன் சேனைகண் முழுது மேத்த.

134 அந்தணர் குழாங்க ளேத்த வருமுனிக் கணங்க ளேத்தப்
பந்தணை விரல்சேர் செங்கைப் பாவையர் வீதிதோறுஞ்
சந்தனக் குழம்பு சுண்ணந் தாதவிழ் மலர்கள் சிந்தி
யிந்திர விழாவ தென்ன விறைத்தனர் மணியும் பொன்னும்,

135 மதிக்குடை நிழற்றத் தெய்வ மங்கையர் கவரி வீசக்
கதிக்குநின் றிறங்கு வோருங் காசினி யோருங் கண்டு
துதித்தெழ வேகுங் காலைச் சுடரொளிப் பாலோ கத்திற்
பதித்தபே ரருளோ டோங்கும் பாவசா னந்தநாதன்.

136 அந்தமில் பேரின் பத்தா ரடியரோ டமைந்த சோதிச்
செந்திரு மார்ப ராழ்வார் சிறந்தசீர்ப் பவனி காண
வந்தனர் கருடன் மீதின் மான்மறிக் கானும் வையந்
தந்தநான் முகனும் போற்றத் தாமரைச் செல்வியோடும்.

[137] மண்ணெலா மனிதர் செற்ற மறையவர் மறைகள் பாட
விண்ணெலா மிமையோர் செற்ற விரிஞ்சனு மானும் போற்று
மண்ணலார் நித்தர் முத்த ரணியணி நிறைப்ப வாங்கே
கண்ணெலாங் களிப்ப வான வேந்தனுங் கசிந்து போற்ற.

138 கண்டுயர் பெரியாழ் வாருங் கருத்தினி லிறுமாப் பற்பங்
கொண்டிலர் கொண்டல் வண்ணன் குளிர்மதி வதனக்கண்
புண்டரீ கத்துள் வைகும் பூவையை மார்பிற் கண்டார் [டார்
தொண்டர்கள் குழாத்தைக் கண்டார் துணைவிழி யருவிசோர்
வார்.

139 கருதுவார் கருத வாடுங் கருணையங் கடலார் மேனி
மிருதுவை யிளமை தன்னை மெய்புறு குழைவை மார்பில்
வருதிரு வருளைக் கண்டு மண்ணவர் கண்ணே றூலே
பொருவரு முருவில் மாசு புகுமெனத் துணுக்கென் றஞ்சி

140 தன்னிரு விழிகள் சென்று சாரினும் பிழைக்கு மென்ன
முன்னுறப் பல்லாண் டென்று மொழிந்துகாப் பிட்டக்கோலம்
பின்னுறக் காண்போ மென்று பிரிந்தொரு திசையை நோக்கி
யென்னையாண் டருள்வார் பல்லாண் டெனுந்திருப் பதிகந்
தன்னை.

141 ஆனைமே லிலங்கப் போட்ட வணிமணி தாள மாகத்
தேனையுந் தலங்க லான்றன் சேவடி செவ்வி மார்பிற்
கானையுந் தளத வல்லி கதிரொளித் திகிரி சங்க
மேனைய பிறவுங் காப்பென் றிசைத்தன ரிசைத்த பின்னர்.

142 நோக்கினர் திருக்கோ லத்தை நோற்றநோன் புடைய வன்பர்
வாக்கொடு மனமுங் கண்ணும் வள்ளற னுருவிற் பாயக்
கோக்கிளர் மதுரை யுள்ளோர் மன்னவன் கோதி லாத
பாக்கியச் செல்வ நம்பி யெனுமவர் பலருங் காண.

வேறு.

143 உளங்கருணைச் சடகோப ருரைத்ததிரு வாய்மொழியில்
விளங்கியசீர் நெறிப்படியே விமலனருட் கருடன்மிசைக்
கிளர்ந்துபிர மன்சிவனென் றிவர்வணங்கக் கிளரொளியா
யளந்தெவரு மறிவரிய வச்சுதனர் வீற்றிருந்தார்.

144 அவ்வண்ணம் வீற்றிருந்த வருளுருவை யாழ்வார்கண்
டெவ்வண்ணத் தவஞ்செய்தேன் யானந்தோ வெனவழுது
மவ்வண்ண மிலாதவரு மலர்க்கரங்கள் சிரங்குவித்து
மைவண்ணப் பரனேகைம் மாறில்லை யெனவாழ்த்தி.

145 காராருந் திருவுருவின் கருணையினு ளமழிந்திட
டாராத காதலினு ரனுபவமுள் ளடங்காதே
கூராழி சங்கேந்துங் கொண்டலுக்குப் பாமாலை
சீராருஞ் சொற்றமிழாற் பாடவென்று சிந்தைசெய்தே,

156 மச்சமுதல் கற்கிவரை மண்ணிடையில் வந்துதித்த
வச்சுதனர் திருவுருவி லாயர்மனை வளர்ந்தவர்த
மெச்சுதிருக் கலியாண குணங்களுமெய் விளங்கியசீர்ப்
பச்சைமுகிற் பாலகனும் பருவத்தின் பலசெயலும்.

147 பாடுவான் சிந்தித்துப் பரிவோடு மிறைதிருத்தாள்
சூடுவா ரினைந்தனரத் தோமில்லார் தஞ்சிரத்திற்
றேடுவார் தேடநின்ற திருமால்சீ ரடிவைத்தா
ருடினர் வானவர்கண் மண்ணவர்க ளதிசயித்தார்.

148 சைவர்முதற் சமையத்தார் தத்தமக்காங் கடவுளரைக்
கைவிட்டா ரிங்கில்லா ரங்கில்லை யெனுங்கருத்தான்
மெய்வைத்தார் திருமால்சீ ரடியார்தம் விரைமலர்த்தா
ணைவுற்றான் பாண்டியனு நாரணன்சீர் நலந்தெரிந்தே.

149 நின்றனனக் காலத்து நெடுமாலுஞ் சமையிகளை
வென்றவரே யின்றுமுதல் வேதக்கோன் பட்டர்பிரா
னென்றிசைக்கு மெழினும மியம்பினோ மெனவியம்பிச்
சென்றனர்வான் றேவருடன் றெளிவிசும்பிற் சேர்ந்தனரால்.

150 பட்டர்பிரா னாழ்வாரும் பரஞ்சோதித் தடங்கடலா
மெட்டெழுத்தின் றனிநாத னேகியபின் மாகரிஷய
விட்டிறங்கித் தோற்றவரை வியன்மதுரை மன்னவனை
மட்டவிழ்பூந் துழாய்முடியா னடியவராய் மன்னவைத்தே.

151 மனக்கருத்து முற்றுவிப்பான் வடமதுரை பிறந்தவர்வாழ்
புனத்துளப வனஞ்சூழ்ந்த புதுவைநகர் தனிற்போந்து
தினத்தினமு மருள்விளங்குந் திருப்பல்லாண் டாதியாய்க்
கனத்தவருட் சென்னியோங் கந்தமாய்க் கலைதெரிந்தே.

152 நன்னெறிச்சீர்த் திருமொழியோர் நானூற்று நாற்பதையு
மின்னிசையா லெடுத்தோதி யேழுலகு முய்வித்தாங்
கன்னவயற் புத்தூரி லளவிறந்த பலகால
மின்னுமணி முடிமாயன் றிருவடிக்கீழ் வீற்றிருந்தார்.

2-வது பெரியாழ்வார் பிரபந்தம்

முற்றும்.

கவிதையும், வீரச்சுவையும்.

[ஸ்ரீவை. குஞ்சு.]

ஆரியவர்த்தத்தில் தோன்றிய வாகவிகள் பெரும்பாலருக்குக் கவிதா சக்தியோடு நெஞ்சுறுதியும் மிகுந்திருந்தது. மானமே பெரிதெனமதித்துவாழ்ந்த நமது நாட்டுப் பாவலர்கள், தமது வா நாட்களில் பெரும்பகுதியை வறுமையிலேயே கழிக்கவேண்டியிரு துங்கூட, எத்துணைத் துன்பம் வந்தாலும், என்ன இடர்ப்பட்டு வருந்தினும் அஞ்சி உறுதியிழந்தார்களில்லை. செந்தமிழ்தந்த சிவபெருமானது பாடலேயாயினும் அது குற்றம் வாய்ந்ததேயென்று யிறைவன் முன்னிலையில் நின்று தோள்கொட்டிய நக்கீரனது சரிதம் இன்றும் புதிதாகவேயிருக்கிறது.

மேல்நாட்டுக் கவியான பைரனைப்போன்று யுத்தமுனையில் போர்கொடுக்கச் சென்றவருக்குத்தான் வீரச்சுவையோடுகூடிய கவிகளைச் செய்யலாகுமென்பதில்லை. யுத்தகளத்திற்குச்சென்று, மாற்றாருக்குப் புறங்காட்டித் திரும்புவதில்லை யென்றும், உயிரையே அலட்சியமாகச் சிந்துவதற்குக்கூடப் பின்னடையாத ஒரு உண்மை வீரன், எத்தகைய உணர்ச்சியோடிருக்கின்றான், என்று சுவைபடக் கூறும் சக்தி, கவி யொருவனுக்கேயமைந்து கிடக்கின்றது ,என்பதை யெவரும் மறுக்கமுடியாது.

வெகு காலத்திற்குமுன், போர் என நவிலின், அச்சொல் தேனினும் களிப்புச்செய்யுஞ் சிந்தையராகிய வீரர்கள் காட்டிய பராக்கிரமச் செயல்களைக் கற்பனையும், வர்ணனையுஞ் சேர்த்துச் சுவைப்படுத்திவைத்திருந்தார்கள் நம் கவிகள். அக்கதைகளைப் படிக்கும்பொழுது உண்டாகும் உற்சாகத்திற்கு எல்லையில்லை. மஹாபாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்களைப் படிக்கும்பொழுது, அவைகளில் தோன்றும் கதாநாயகர்கள் ஆற்றிய செயல்களை ஆராயும் பொழுது நமது புஜங்களின் தசை பூரித்து வஜ்ராயுதத்தின்

வேகத்தைப் பெறுகின்றது; மனம் கொந்தளிக்கின்றது. மார்பு விரிந்து கொடுக்கின்றது. தோள்களிலும் புதிய சக்தியேற்படுகின்றது. புதிய மனிதர்களாகவே போய்விடுகிறோம்.

நெஞ்சிலுரமும், நேர்மைத்திறமுமற்றமக்களையோ, அல்லது தங்கள் ஆற்றலை மறந்துவிட்ட மக்களையோ பராக்கிரமசாலிகளாக்கி விடக்கூடிய மொழிகளையும் கவிதைகளாகவே மதிக்கவேண்டும் என்பது நவீன ஆசிரியர்களில் சிலரின் கருத்து. குருக்ஷேத்திரத்தில் தொடங்கிய பாரத யுத்தத்தின் முதல் நாள் ஆரம்பத்திலேயே, தனது காதலின் நண்பரையும், கலைதந்த குரவரையும், மாதுலர், சோதரர், மைத்துனர் ஆகியவர்களைக்கண்டு, அவர்களைக்கொன்று வாழ்வதில் சிறிதுகூடப் பிரியம் இல்லாத பார்த்தன், மெய் நடுக்கங் கொண்டான். அவன் கையிலுள்ள வில் கழன்று வீழ்ந்தது; மனம் பதைத்தது; ஓய்ந்தன கால்கள். இதைக்கண்டதும் சுருதியின் முடிவுப்பொருளாகிய கண்ணன், கீதா சாஸ்திரத்தைக்கூறி அவனைப் போர் செய்யுமாறு தூண்டி வெற்றிபெறச் செய்துவிட்டான். அக் கீதா சாஸ்திரம் உயர்ந்த சுவையோடு கூடிய கவிதையே.

இதுமட்டுமல்ல. பாரதநாட்டின் வீரம்மிகுந்த மக்கள் வசிக்கும் மாராட்டிய நாட்டை முகலாய மன்னவர்களின் படைகள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. நாட்டைச்சார்ந்த வயல்களிற் செழித்து வளர்ந்திருந்த கதிர்களை அன்னியர் சூரையாடுகின்றனர். அவர்களின் செயல்களெல்லாம் நாட்டின் தலைவனான சிவாஜியின் நெஞ்சையறுத்தன. இனி மாற்றாத செயலைக் கணமேனும் பொருத்தல் அசாத்தியம் என்று கண்டதும் பெரும் படையொன்றை திரட்டிக் கீழ்வருமாறு கூறலானான்.

சேனைத் தலைவர்காள்! சிறந்த வீரர்காள்!!

* * * *

வெற்றியே யன்றி வேறெதும் பெறுகிலேம்
செற்றினி மிலேச்சரைத் தீர்த்திடவம்மின்
ஈட்டியால் சிரங்களை வீட்டிட எழுமின்
நீட்டிய வேல்களை நேரிருந் தெரிமின்!

வாழுடை முனையினும் வயந்திகழ் சூலினும்
ஆளுடைக்கால் களடியினுந் தேர்களின்
உருளையினிடையினும் மாற்றலர்த் தலைகள்
உருளையிற்கண்டு நெஞ்சுவப் புறவம்மின்!

நம்மிதம் பெருவளம் நலிந்திட விரும்பும்
சும்பரை வேரறத் தொலைத்த பின்னன்றோ
ஆணெனப் பெருவோம்! அன்றிநாம் இறப்பினும்
மானுறுத்தேவர் மணியுலகடைவோம்!

வாழ்வமேற் பாரதவான்புகழ்த் தேவியை
தாழ்வினின் றுயர்த்திய தடம்புகழ் பெறுவோம்!
போரெனில் இதுபோர்! புண்ணியத்திருப்போர்!!
பாரினிலொன்று பார்த்திடற் கெளிதோ?

(பாரதியார்)

மேற்கூறிய மொழிகள் கற்பனையோடுகூடிய மொழி பெயர்ப்பாகு மேனும், சிவாஜி தனது அன்னை மொழியில் கூறிய வசனமொழிகளையும் உயர்ந்த கவிதையின்பால் சேர்த்துவிடலாம்.

ஜீவவேகம் அற்றுப்போன மந்திரதந்திரங்களில் மூழ்கிப் போயிருந்த சமணமதத்திலிருந்து, தனது சூலைநோயைத் தடுத்தாட் கொண்ட சிவபெருமானது தொண்டிலீடுபட்டு, சைவ சமயத்தில் புகுந்ததற்காகத் திருநாவுக்கரசரைச் சமணவேந்தன் தண்டிப்பதற் காகவழைத்தான். நேற்றுவரைத் தன்னைக் குருவாக மதித்துப் பணிந்துவந்த ஒரு அரசன் தன்மீது கட்டளைச் செலுத்தத் தொடங் கினல் எவரே பொருப்பார்? உடனே,

“நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்திலிடர்ப் படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யென்னாளுந் துன்பமில்லை!

யென பதிலிருத்தார். "அஞ்சுவது யாதொன்றுமில்லை, யஞ்சவரு வதுவுமில்லை" யென்ற உறுதியோடு கூடியனவென்று சொல்ல வேண்டியதில்லை. அவை வர்ணிக்குந் தரமற்றவை.

நவீன ஆதர்சம் தமிழ்நாட்டில் தழுவப்பெற்ற 20-ம் நூற்றுண்டில் தோன்றிய திரு. பாரதியாரது கவிதைகள் முழுவதுமே வீரச்சுவையோடுகூட விளங்குகின்றன. அவைகளிலுள்ள செய்யுட்களைப் படிக்கும்பொழுது, அச்செய்யுள்கள் நாம் மறந்துவிட்டிருக்கிற கடமைகளை யெடுத்துக்காட்டுவதோடு, வீராவேசமும், வீரவெறியும் நமது நெஞ்சத்தில், அலைமேல் அலை விழுவதுபோல கொந்தளித்துக்கொண்டு செல்லா நிற்குமாறு செய்துவிடுகின்றன.

"தோளை வலியுடையதாக்கி, உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி, அரி
வாளைக்கொண்டு பிளந்தாலும், கட்டு
மாருவுடலுறுதி—கொடுத்தருளவேண்டும்.

என்று ஒருவீரனது குணமும், உடலமைப்பும் தனக்கு உண்டாக வேண்டுமென்று பராசக்தியிடம் வரங்கேட்கின்றார்.

முப்பது கோடிவாய் நின்னிசை முழங்கும்
அறுபது கோடிதோள் செற்றுனக் காற்றவும்
திறனிலாளென்றுனை யாவனே செப்புவன்?

என்று பாரதத் தாயைப்பார்த்து வினவும் செய்யுளில் வீரச்சுவை தனியாக மிளிர்ந்து விளங்குகின்றது. பாரதியார், இப்பாரத பூமியின் நான்குதிசையிலும் சுவாதந்தர்யநாதமெழுந்து ஓங்கவும், நாகமொத்த அடிமை வாழ்வு நைந்து கழிந்திடுவதுமே தனது லட்சியமாகவைத்துப் பாடியிருக்கின்றார் என்பதை யெவரும் மறுக்கமுடியாது. முடிவாகக் கூறுமிடத்து, நமது தமிழ் நாட்டுப் பாவலர்கள் வீரரஸம் செறிந்தபாடல்களைப் பாடுவதில் மேல் நாட்டுக் கவிகளுக்குச் சற்றுமிளைத்தவர்களல்லர்.

உ

கஜபதிசிங் அல்லது

மேனாட்டுத் துப்பறிபவன்.

K. சங்கரநாராயணன்

(496-ம் பக்கம் தொடர்ச்சி.)

கஜபதிசிங்:— உங்கள்மீது இன்னுமொரு கடன் ஏற்பட்டிருக்கின்றது.

நாராயணசாமி நாயுடு:— கடன் எவ்வளவென்று சொல்லுங்கள். இப்பொழுதே கொடுக்கின்றேன். உங்களுடைய திறமைக்கு என்ன கொடுத்தாலும் தகும்.

கஜபதி:— அந்தக் கடன் எனக்கல்ல. உங்களுடைய அருமைப் புதல்வனுக்கு. இந்த மாயக்களவில் அவன் உங்களுக்குச் செய்திருக்கும் உதவிக்கு நீங்கள் 36 மணி நேரம் சிறைவாசம் பரிசளித்தீர்கள். அவனிடஞ்சென்று மன்னிப்புக் கேட்கவேண்டியதே உங்கள் கடன்.

நாயுடு:— அவ்வாறாயின் ரங்கசாமி திருடவில்லையோ?

கஜபதி:— ரங்கசாமி குற்றவாளியில்லை. நேற்றும் இதைத்தான் உங்களிடம் வற்புறுத்திக் கூறினேன். இன்று ஆதாரங்களுடன் அதை நிரூபிக்கின்றேன்.

நாயுடு:— நாம் உடனே ஓடிச்சென்று அவனைச் சிறைச்சாலையினின்றும் மீட்டுவோம். அவனிடம் உண்மையைத் தெரிவிக்கவேண்டாமா?

கஜபதி:— அவனைவிடுதலை செய்தாய்விட்டது. இந்நேரம் உங்கள் பங்களாவிற்கு வந்திருப்பான். இன்று காலை 4 மணிக்குத்தான் இம்மர்மத்தின் காரணங்களைக் கண்டுபிடித்தேன். உடனே சிறைச்சாலைக்குச் சென்று அவனை விடுதலைசெய்வித்தேன்.

நாயுடு:— தயவுசெய்து இம்மாயக்களவை எவ்வாறு கண்டு பிடித்தீர்களென்று கூறுங்கள். நான் மிகவும் ஆவலாயிருக்கின்றேன் கேட்பதற்கு.

கஜபதி:— ஆதியோடந்தமாகத் தெளிவாயுரைக்கிறேன். முதலாவதாக உங்கள் வீட்டிற்கு அடிக்கடி வரும் வரதராஜனை சாரதா காதலித்துவிட்டாள். அதுதான் மரகதக் கிரீடத்தைப் பிளப்பதற்கு முக்கியகாரணம்.

நாயுடு:— சாரதா வரதராஜனைக் காதலித்திருக்கின்றாளா? நான் நம்பவில்லை.

கஜபதி:— நான் நம்புகிறேன். உங்களுக்காவது ரங்கசாமிக்காவது வரதராஜனுடைய உண்மையான குணமும் நடத்தையும் தெரியாது. அதனாலேதான் வரதராஜனைத் தன் வீட்டுக்குள் அடிக்கடி வந்து போகும்படி அனுமதி கொடுத்தான் ரங்கசாமி. சென்னையில் கெட்டுப்போன மனிதர்களில் வரதராஜன் முக்கியமானவன். சூதாட்டத்தில் பணத்தை இழந்தவன், அயோக்கியன், கொலைகளுக்கஞ்சான். சாரதாவுக்கும் அவனுடைய உண்மைக் குணந்தெரியாது. சாரதா அவனைக் காதலித்துவிட்டாள். அவனும் அவளைக் காதலித்தான். எத்தனையோ பெண்களின் கற்பை பொய் வார்த்தைகளாற் கெடுத்த இத்திருடனின் வார்த்தையை உண்மையென நம்பிவிட்டாள் சாரதா. தன்னைத் தெய்வமென்று அவன் வழிபட்டு வருகிறானென சாரதா நினைத்துக்கொண்டிருக்கின்றாள். சாரதா ஒருவனைத்தான் தனது முழுமனதுடன் நேசிப்பதாய் அவன்கூறி இருக்கின்றான். எவ்வாறு ஆடவேண்டுமென்று அப்பிசாசுக்குத் தெரியும். சாரதாவைத் தனது ஆயுதம்போல உபயோகிக்க அவன் தீர்மானித்துவிட்டான். நாள்தோறும் அவ்விருவரும் சந்தித்துக் கொஞ்சிக்குலாவுவது வழக்கம்.

நாயுடு:— என்னால் நம்பமுடியாது. நான் நம்பமாட்டேன் என்று கூவினார்.

கஜபதி:— நேற்றிரவு உங்கள் வீட்டில் யாது நடந்ததென்பதைக்கூறுகிறேன். நீங்கள் படுப்பதற்குச் சென்றபிறகு சாரதா குதிரை லாயத்துக்குச் செல்லும் பாதையை நோக்கியிருக்கும் ஜன்னலண்டை போய்ச்சேர்ந்தாள். அப்பாதையில் வரதராஜன் நின்றுகொண்டிருந்தான். தனது காதலனுடன் உரையாட அவள் ஜன்னலின்மீதுட்கார்ந்துகொண்டாள். நேற்றுமாலை சிறிது மழை

தூற்றியிருந்ததால் தரை ஈரமாக இருந்தது. ஆகையால் வரதராஜ னுடைய காலடிகள் தரையில் நன்றாய்ப் பதிந்திருந்தன மாகதக்கிரீ டத்தைப்பற்றி சாரதா வரதராஜனிடம் கூறியிருக்கின்றாள். தங்கத் தின்மீது வைத்திருந்த பேராசையானது வரதராஜனுடைய மன தைத் தூண்டிற்று. தனது இழிவான செய்கைக்கு சாரதாவை இணங்கும்படி வற்புறுத்தினன். சாரதா உங்களை அதிக அன்புடன் நேசித்திருந்தாளென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. காதலன்மீது வைத்திருக்கும் பாசமானது மற்ற ஆசாபாசங்களைக் காட்டிலும் வலிமை பொருந்தியது. அத்தகைய வலிமை பொருந்திய காதல் சில பெண்மணிகளின் அணிகலனுக விளங்குகின்றது. சாரதா அப்பெண்மணிகளில் ஒருவளென நினைக்கிறேன். தனது காதலனுடைய கட்டளைகளை அவள் கேட்டுக்கொண்டிருந்த தருணம் நீங்கள் மாடியினின்றும் கீழிறங்கி வந்திருக்கின்றீர்கள். ஆகையால் அவள் திடீரென ஜன்னலை அடைத்தாள். மேலும் உங் களிடம் ஓர் வேலைக்காரியின் செய்கையைப்பற்றியும், அவளுடைய காதலைப்பற்றிய மாக்காலை (Wooden-Leg)ப் பற்றியும் கூறினுள். ஆனல் அதுவும் உண்மையே,

வெளியில் தனக்கேற்பட்டுள்ள கடனைப்பற்றியும், நீங்கள் கூறிய கோபமொழிகளைப்பற்றியும் சிந்தனைசெய்தவண்ணமாய் படுக்கையின்மீது படுத்திருந்தாலுதலால் ரங்கசாமிக்குறக்கம்வரவில்லை நடுநிசியில் மனிதர்களின் காலடிச் சத்தத்தைக்கேட்ட அவன் கண் விழித்துப் பார்த்ததும் சாரதா மாகதக்கிரீடம் வைத்திருக்கப்பட்ட அறைக்குள் நுழைவதைப் பார்த்தான். இச்சம்பத்தைநோக்கி அளவற்ற அச்சமுந் திகிலுங்கொண்டு ரங்கசாமி படுக்கையினின் றும் எழுந்திருந்து, பூனைபோல் நடந்துசென்று, ஓர் திரையின் பின் புறத்தில் பதுங்கி இருந்துகொண்டு, மங்கலாய் எரிந்துகொண்டிருக் கும் ஓர் தீபத்தினுதவியால் சாரதா செய்யும் ஒவ்வொரு காரியத் தையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். சாரதாவை அன்பு டன் காதலித்துவந்தமையால் அவளது ஈனச்செய்கையை பகிரங்கப் படுத்த அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. அத்தகைய மேம் பட்ட நற்குணம் படைத்த இளைஞன் அவன்! இரும்புப்பெட்டி யைச் சாரதா திறந்ததையும், அதிலிருந்த தங்கப்பெட்டியை எடுத்த தையும், அதைத் திறந்து மாகதக்கிரீடத்தை எடுத்ததையும், மெது வாக நடந்துசென்று அவளுடைய அறையை அடைந்ததையும், ஜன்னலண்டை சென்றதையும், ஜன்னல் மூலமாக இருளில் குதிரை லாயத்துக்குச்செல்லும் பாதையில் நின்றுகொண்டிருந்த ஓர் மனித னிடம் அக்கிரீடத்தைக் கொடுத்ததையும் அவன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

எவ்வளவுநேரம் சாரதா இந்நாடகத்தில் தோன்றுகின்றளோ அவ்வளவுநேரம் ரங்கசாமியினல் ஒன்றும்செய்ய இயலாமலிருந்தது. ஏனென்றால் அவளை அவன் காதலித்திருந்தான். பிறகு திடீரென்று ஜன்னற்கதவை அடைத்துவிட்டு சாரதா படுத்துக்கொண்டாள். ரங்கசாமி, சாரதா மறைந்த அடுத்தவினடியில் குதிரைலாயத்துக்குச் செல்லும் பாதையை நோக்கி ஓடினன். மத்தமான சந்திர வெளிச்சத்தில் வரதாராஜன் நின்றுகொண்டிருப்பதையும் அவன் கரத்தில் மரகதக்கிரீடம் பளபளவென மின்னிக்கொண்டிருப்பதையும் அறிந்துகொண்ட உங்கள் புத்திரன் வரதாராஜன்மீது பாய்ந்து கழுத்தை அமுக்கிப் பிடித்துக்கொண்டான். இருவருக்கும் போர் மூண்டது. ஒருவரோடு ஒருவர் பலமாய் மோதிக்கொண்டனர். சண்டையில் வாதாராஜனுடைய வலது புருவத்தில் பலத்த காயமுண்டாயது. அதினின்றும் கபகபவென்று உதிரம் வெளிப்போந்தது. சண்டையின் மத்தியில் ஏதோ ஒரு பொருள் படீரென்று ஒடிந்த சத்தத்தை ரங்கசாமி கேட்டான். ஆனல் அதைப் பொருட்படுத்தாமல், வரதாராஜனுடைய கரத்திலிருந்து மரகதக்கிரீடத்தைப் பிடுங்கிக்கொண்டு மேன்மாடியை நோக்கி ஓடிச்சென்று வெளிச்சத்திற் பார்க்கவே, கிரீடம் வளைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். தன்னுடைய பலங்கொண்டமட்டும் அதை சரியான நிலைமையில் நீட்டுவதற்கு அவன் முயற்சிசெய்து கொண்டிருந்த சமயம், நீங்கள் எழுந்திருந்து ரங்கசாமியைக் 'களவுங்கையுமாக'ப் பிடித்துவிட்டீர்கள். உங்கள்மீது ரங்கசாமி வைத்திருக்கும் ஒப்பில்லாத அன்பும் பக்தியும், மரகதக்கிரீடம் தவறுவதால் உங்களுக்கேற்படும் அபவாதமும் பழியுமே ரங்கசாமியை இந்த உயர்ந்த காரியம் செய்யும்படியாகத் தூண்டிற்று.

நாயுடு:— இது உண்மையாக இருக்கமுடியுமோ?

கஜபதி:— உங்களுக்குப் பெரிய உபகாரம்செய்த ஒருவனை வாயில்வந்தபடி நீங்கள் திட்டியதனல்தான் ரங்கசாமி மௌனஞ் சாதிக்க ஆரம்பித்தான். மேலும் தனது காதலைக் கொள்ளை கொண்ட ஓர் பெண்மணியின்மீது கேவலமான இக்குற்றத்தைச் சாட்ட அவன் சிறிதும் விரும்பவில்லை.

நாயுடு:— இப்பொழுதுதான் ஞாபகத்துக்குவருகிறது. மரகதகிரீடம் சேதப்பட்ட நிலைமையில் இருந்ததைப் பார்த்ததும் சாரதா மூர்ச்சையுற்றாள்.

கஜபதி:— ரங்கசாமி உங்களிடம் சிலநிமிடங்கள் விடை பெற்றுச்சென்றது, போர்நடந்த இடத்தில் காணமற்போன மாக தங்கள் கிடைக்கின்றனவாவென்று பார்ப்பதற்காகத்தான்.

நாயுடு:— ரங்கசாமி விஷயத்தில் நான் தவறுதலாக நடந்து கொண்டதற்கு அவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டியது அவசியந்தான்.

கஜபதி:— உங்களுடைய பங்களாவிற்கு நேற்றுமாலை நான் வந்ததும் பங்களாவின் வெளிப்புறத்தில் ஏதாவது காலடிகளின் அடையாளங்கள் காணப்படுகின்றனவாவெனப் பார்ப்பதற்காகவே நான் சிறிது நேரம் பங்களாவைச் சுற்றி சோதனைசெய்தேன். மாலையில் சிறிது மழை பெய்திருந்தமையால் தரையில் காலடிகள் நன்றாகப்பதிந்திருந்தன. புல்தரையைச் சுற்றியிருக்கும் பாதைகளில் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி அநேகம் காலடிகள் தாறுமாறாகக் காணப்பட்டன. ஆனல் சமையலறையின் பக்கத்தில் பதிந்திருந்த காலடிகள் எனக்கு மிகவும் அவசியமான உதவியளித்தது. அவைகளைப் பூதக்கண்ணுடியாற் பரிசோதித்தேன். ஓர் பெண்மணியின் காலடிகளும், மரக்கால் அணிந்துள்ள ஓர் ஆடவனின் காலடிகளும் எனது கவனத்தைக் கவர்ந்தன. அவ்விருவர் அதிக பரபரப்புடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தனரென்பது அவர்களுடைய காலடையாளங்களினின்றும் தெரியவந்தது. சமையலறையினின்றும் அப்பெண்மணி அந்த இடத்திற்கு நாலைந்து முறை ஓடிச்சென்றிருக்கிருள். மரக்காலையுடைய மனிதன் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருக்கின்ருன். மரக்காலானது நின்றவிடத்திலிருந்து, அசைந்ததாகக் காணப்படவில்லையாதலாலும், அப்பெண்ணின் பாதங்களின் முன்பாகம் நன்ருகத் தரையில் பதிந்தும் குதியங்கால்கள் (heels) நன்ருய்ப் பதியாமலும் இருந்தபடியாலும் மேலேகூறிய முடிவுக்கு நான் வந்தேன். உங்களுடைய சரிதையைக்கேட்ட பிறகு இக்காலடிகள் யாருடையதென்று ஊகித்துக் கொள்வது எளிது. கோமளமும் சொக்கலிங்கமும் வெகு நேரம் வரை வெளியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்போலும். திரும்பவும் தோட்டத்தைச் சுற்றிப்பார்த்தேன். போலீசாருடைய அடிகளைத் தவிர வேறு அடையாளங்கள் காணப்படவில்லை.

நான் குதிரைலாயத்தண்டை வந்ததும், எல்லா விஷயங்களும் நன்குவிளங்கிவிட்டன. இருவரிசையாகக் காலடிகள் தென்பட்டன. ஒருவரிசையில் பாதரட்சை (Boots) யணிந்த மனிதனும்

மற்றவரிசையில் பாதரட்சையணிந்துகொள்ளாத மனிதனும் ஓடிச் சென்றிருப்பதை எளிதில் உணர்ந்துகொண்டேன். உங்களுடைய சரிதை என் மனச்சந்தேகத்தை உடனே நிவர்த்திசெய்தது. பாதரட்சையணிந்துகொள்ளாத மனிதன் ரங்கசாமி யென்பதை அறிந்துகொண்டேன். மற்றமனிதன் யாரென்பதைக் கண்டுபிடிக்கவேண்டியதே எனதுவேலையாயிற்று. பாதரட்சையணிந்துகொண்ட மனிதனுடைய காலடிகளைப் பின்பற்றிச்சென்றேன். அது சாரதாவின் அறை ஜன்னலின் பக்கம் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்ததும் வெளியாயிற்று. திரும்பவும் அக்காலடிகளைப் பின்பற்றிக்கொண்டு குதிரைலாயம் வந்துசேர்ந்தேன். பாதரட்சை அணிந்துகொள்ளாத உங்கள் புத்திரன் அதிக விரைவுடன் ஓடிச்சென்று, பாதரட்சையணிந்துள்ள மனிதனை பின்பற்றிப்பிடித்ததையும் அறிந்துகொண்டேன். குதிரைலாயத்தின் முன்பு போர் நடந்தவிஷயம் நன்குபுலப்பட்டது. தரையில் உதிர அடையாளங்காணப்பட்டது. பாதரட்சையணிந்துள்ள மனிதனுடைய காலடிகள் அவ்விடத்திலிருந்து வீதியைநோக்கிச் சென்றதாகத் தோன்றியது. அதைத் தொடர்ந்துகொண்டு வீதியையடைந்தேன். வீதியிலும் ஒன்றிரண்டு ரத்தப்பொட்டுகள் (Drops of blood) காணப்பட்டன. ஆகையால் ரத்தம் வெளிப்படக்கூடிய சாயம்பட்டது. பாதரட்சையணிந்துள்ள அம்மனிதனே வீதியை நோக்கி ஓடிச்சென்றிருக்கின்றானென்ற விஷயத்தை உறுதிசெய்துகொண்டேன். வீதியிற் சிறிது தூரத்துக்கப்பால் அவனுடைய காலடையாளங்களைக் கண்டுபிடிப்பது துர்லபமாயிற்று.

பங்களாவுக்குத் திரும்பிவந்ததும் சாரதாவின் அறை ஜன்னலைக் கண்ணாடியால் (Lens) சோதனை செய்தேன். ஜன்னல்வழியாய் ஓர் உருவம் வெளிச்சென்ற விஷயம் வெளிப்பட்டது. ஈரமுள்ள காலடிகள் அங்கு காணப்பட்டமையால் வெளிச்சென்ற உருவம் ஜன்னல் வழியாய் அறைக்குள்வந்த விஷயமும் தெரியவந்தது. அங்கு என்ன நடந்திருக்கக்கூடுமென்ற விஷயத்தை ஊகித்தறிந்துகொண்டேன். ஓர் மனிதன் ஜன்னலின் வெளியில் காத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும், மற்றொரு உருவம் கிரீடத்தைக்கொண்டுவந்து ஜன்னல்வழியாக வெளியேசென்று அம்மனிதனிடம் அதைக்கொடுத்துவிட்டு ஜன்னலின்வழியாக உள்ளே வந்திருக்கவேண்டுமென்றும், ரங்கசாமி இந்நாடகத்தைத் தன்னுடைய அறையிலிருந்து கவனித்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், மரகதக்கிரீடத்தை வெளியில் நின்றுகொண்டிருந்த மனிதனிடம் அளித்துவிட்டு அவ்வுருவம் அறைக்குள் நுழைந்ததும் ரங்கசாமி ஓடிச்

சென்று வெளியில் நின்றுகொண்டிருந்த மனிதனைப் பின்பற்றிச் சென்றிருக்கிறுனென்றும், குதிரைலாயத்துக்குமுன் அவ்விருவருக்கும் போர் நிகழ்ந்திருக்கவேண்டுமென்றும், போரின் மத்தியில் இருவருடைய பலத்தினுலும் மாகதக்கிரீடம் பின்னப்பட்டிருக்கவேண்டுமென்றும், ஏனென்முல் இருவரும் மாகதக்கிரீடத்தைப்பற்றி இழுத்திருக்கின்றனர். அதைப் பின்னப்படுத்த ஒருவருடைய பலம்போதாது. நான் எளிதில் ஊகித்தறிந்துகொண்டேன். ரங்கசாமியின் சாத்தில் மாகதக்கிரீடம் அகப்பட்டுக்கொண்டது. உடனே தனது அறைக்கு அவன் ஓடிச்சென்றிருக்கிறுன். மற்றவன், அத்ாவது திருடன், காத்தில் மூன்று மாகதங்களுடன் கூடிய பின்னப்பட்ட துண்டு அகப்பட்டுக்கொண்டது. அவனும் செத்தவன் போல விதியை நோக்கிச் சென்றிருக்கிறுன். இதுவரை எனக்கு எளிதில் துலங்கிவிட்டது. மற்ற மனிதன் யார்? திருடனிடம் எவ்வாறு மாகதக்கிரீடம் சிக்கிக்கொண்டது? இது விஷயமாய் ஆராயத் தொடங்கினேன்.

மாகதக்கிரீடத்தை மாடியிலிருந்து கீழே நீங்கள் எடுத்து வாவில்லை யென்று கூறிவிட்டீர்கள். வேறு யார்? சாரதா அல்லது வேலைக்காரிகள். வேலைக்காரி யாராவது இச்செய்கைக்கு உடந்தையாயிருந்தால் ரங்கசாமி உண்மையைக்கூறி சாதிக்க அவசியமேற்படுகின்றது. சாரதாவை அவன் காதலிக்கின்முன். ஆகையால் உண்மையை மறைக்க முயற்சிசெய்வது ரங்கசாமிக்கு அவசியமாகத் தோன்றிற்று. மேலும் அபாண்டமான குற்றத்தைத் தனது காதலிமேல் எங்ஙனஞ்சாட்டுவான்! மேலும் நீங்கள் படுக்கையறைக்குச் செல்லும்பொழுது ஜன்னலண்டை சாரதாவைப் பார்த்திருக்கின்றீர்கள். மாகதக்கிரீடத்தைக் கடைசியில் அவள் பார்த்ததும் பெருமூச்செறிந்து மூர்ச்சையாகிவிட்டாள். இவைகளிலிருந்து சாரதாவின்மீதுள்ள சந்தேகம் உண்மையாகிவிட்டது. அவள்தான் முதற்குற்றவாளி.

யாருக்கு உங்கள் மருமகள் உதவி செய்திருக்கக் கூடும்? உங்கள்மீது அவள் வைத்திருந்த ஆசையைக்காட்டிலும்

அதிகமான ஆசையுடைய மனிதனுக்குத்தான் உதவிசெய்திருக்க முடியும். அவனை அவள் காதலித்திருக்கவேண்டும். உங்கள் வீட்டுக்கு பெரும்பாலான மனிதர்கள் வருவதில்லை யென்றும், வரதராஜன் மாத்திரம் அடிக்கடி உங்கள் வீட்டுக்கு வந்துபோய்க்கொண்டிருக்கிறனென்றும் நீங்கள் கூறினீர்கள். வெளியில் விசாரித்ததிலிருந்து வரதராஜனுடைய உண்மைச் சரித்திரம் வெளிப்பட்டது. அவன் பரம அயோக்யன்; அநேகம் நற்குண நாரீமணிகளைக் கெடுத்திருக்கின்றான், பெண்களைக் கெடுப்பதே அவனுடைய கொள்கை. ரங்கசாமி தன்னை அடையாளங்கண்டு கொண்டபோதிலும், சாரதாவின்மீது அவன் வைத்திருக்கும் காதலினால் தன்னைப்பற்றி போலீசாரிடம் பிரஸ்தாபிக்கமாட்டானென்று அவன் தைரியங்கொண்டான்.

நேற்றிரவு ரொட்டிவிற்பவன்போல் நான் வரதராஜனுடைய வீட்டுக்குச்சென்று, அவனுடைய வேலைக்காரனுடன் நட்புபூண்டு, அன்றிரவில்—அதாவது 8 மணிக்குமுன் வரதராஜனுடைய வலது புருவத்தில் திடீரென்று ஓர் காயந்தோன்றிற்றென்ற விஷயத்தை அறிந்துகொண்டு, ஐந்து ரூபாய் கொடுத்து வரதராஜனுடைய பாதரட்சைகளைப் பெற்றுக்கொண்டு, உங்கள் பங்களாவுக்குவந்து, அப்பாதரட்சைகள் காலடையாளங்களுக்குச் சரியாய் இருக்கின்றனவாவென்று பார்த்தேன்.

நாயுடு:— நேற்றிரவு 11 மணி சமயத்தில் ஓர்நாடோடியை எனது குதிரைலாயத்தின்முன் பார்த்தேன்.

கஜபதி:— நான்தான் நாடோடிபோல் உங்கள் பங்களாவுக்கு வந்திருந்தேன். வரதராஜனைக் கைது செய்வதால் போலீசாருக்கு விஷயந்தெரிந்துவிடுமென்றும், அதனால் ஒரு ஜமீன்தாரின் நற்புகழுக்கு ஹானி ஏற்படக்கூடுமென்றும் நினைத்து, இரவில் 12–30 மணிக்கு வரதராஜனைப் பார்த்தேன். மரகதங்களை என்னிடமளித்துவிடவேண்டுமென்று அவனிடம் முதலில் நான் கூறியதும் என்னைத் திட்ட ஆரம்பித்தான். என்னைப் போலீசாரிடம் ஒப்புவித்துவிடுவதாயும் பயப்படுத்தினான். கடைசியில் எல்லா விஷயங்களையும் தெளி

வாக நான் உரைத்தபிறதும் அவன் இடங்கொடுக்கவில்லை என்னைச் சுட நினைத்து மேஜையினின்றும் ஓர் ரிவால்வாரை எடுத்தான். ஆனால் அதைச் சரியாகப் பிடிப்பதற்குமுன் எனது ரிவால்வார், அவன் தலையைத் தொட்டுக்கொண்டிருந்தது. தனக்குத் தீர்மானமாய் நேரப்போகும் ஆபத்தை யுணர்ந்துகொண்டான். அம்மூன்று மரகதங்களுக்கும் ரூ 3000 கொடுப்பதாக நான் கூறினதும் துப்பாக்கியைக் கீழே எறிந்துவிட்டு என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். "கஜபதியின் கரத்தில் சிக்கியவர்கள் மீளுவார்களோ" என்று பல்லைக்காட்டிக் கெஞ்சினான். 'அவைகளை 1000 ரூபாய்க்கு விற்றுவிட்டேன்", என்றுகூறினான். அவனை நான் கைது செய்யப்போவதில்லையென்று உறுதிமொழி கூறிவிட்டு, அவனிடமிருந்த மரகதங்களை விலைக்கு வாங்கிய ரத்னவியாபாரியைத் தேடிச்சென்று, நடந்ததைக்கூறிப் பயமுறுத்தி, ரூ 1000-த்தையுமளித்துவிட்டு, இவ்விஷயத்தை ரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று அவனை அச்சப்படுத்தி, மரகதங்களைச் சட்டைக்குள் பத்திரமாகவைத்துக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்றேன். ரங்கசாமியிடம் நடந்தவற்றையும், மரகதத்தை எவ்வாறு நான் கண்டுபிடித்தேனென்பதையும் விளக்கினேன். உண்மையென அவனும் ஒப்புக்கொண்டான். சிறைச்சாலையதிகாரியுடன் சில நிமிட நேரம் நான் ஸம்பாஷித்ததின் பலனாக இன்று காலை 4 மணிக்கு ரங்கசாமி விடுவிக்கப்பட்டான். அவனை உங்கள் பங்களாவுக்கு அனுப்பிவிட்டு நான் இங்கு வந்தேன்—என்ற கதையை கஜபதிசிங் கூறி, ரூபாய் இரண்டாயிரத்தையும் (மூவாயிரம் ரூபாய்க்கு மரகதங்களை வாங்க வேண்டி ஆயிரம் ரூபாய் கொடுத்தது போக பாக்கி) நாராயணசாமி நாயுடுவின் முன்னிலையில் வைத்தார்.

நாயுடு:— இவ்விரண்டாயிரம் ரூபாயை நான் எடுத்துக்கொள்ளமாட்டேன். நீங்கள் பட்டிருக்கின்ற சிரமத்துக்கு இதைப்போல் இரண்டாயிரம் மடங்கு பணம் கொடுத்தாலும் தகும். இதுவரை நான் கேள்விப்பட்டிருக்கும் நுண்ணிய துப்பறிபவர்களைக் காட்டிலும் நீங்கள் அதிகத்திறமையும், நுண்ணிய அறிவும், சிறந்த யூகமும் பெற்றிருக்கின்றீர்கள். சாரதாவைப்பற்றி நீங்கள் கூறி

னதுதான் என் ஹிருதயத்தை பிளக்கின்றது. அவள் இப்பொழுது எங்கிருக்கிறாளோ? பாவம்! சாரதா !!

கஜபதி:— வரதராஜன் எங்கிருக்கிறானோ அங்குதான் சாரதாவும் இருக்கின்றாள். அவளுக்கு ஏதாவது கொடுக்க விரும்புவதாயிருந்தால் என்னிடங்கொடுங்கள். நான் பத்திரமாகக் கொடுக்கிறேன்.

நாயுடு:— உங்களுடைய பரந்த நோக்கத்துக்கு அதிக வந்தனமளிக்கிறேன்.

வெகுநேரம்வரை அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். நாராயணசாமி நாயுடு கஜபதிக்கு பல வர்தனங்கள் செலுத்திவிட்டு, மாகதங்களைப்பெற்றுக் கொண்டு, விடைபெற்றுச் சென்றார். அவர் சென்றதும்,

கஜபதி:— வேணு! இருதினங்களில் இரண்டாயிரம் ரூபாய்! என்று ஆச்சரியத்துடன் கூறினார்.

வேணு:— "யானைப்பட்டி ஜமீன்தாரிடம் இவ்விஷயத்தைக் கூறினால் இதைப்போல் பரிசொன்று அளிப்பார்" என்று சிரித்துக்கொண்டே பதிலுரைத்தான்.

அடுத்த திங்களன்று யானைப்பட்டி ஜமீன்தார் கடன் வாங்கின தொகையை வட்டியுடன் நாராயணசாமிநாயுடுவிடம் அளித்துவிட்டு மரகதக் கிரீடத்தைப் பெற்றுக்கொண்டார். ஆனால் மரகதகிரீடத்துக்கு நேர்ந்த விபத்தை அவர் அறியார். சுபம்!

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!"

முற்றிற்று.